

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தோட்டக்கலை துறையின் மூலம், தேசிய தோட்டக்கலை இயக்க 2016-2017-ம் ஆண்டு திட்டம் இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ், பவர் டில்லர் மற்றும் மினி டிராக்டர்களை மானிய விலையில் தோட்டக்கலை விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (31.10.2016) வழங்கினார். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு.எம்.நிஜாமுதீன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 769/2016 நாள்: 31.10.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தேசிய தோட்டக்கலை இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ் தோட்டக்கலை விவசாயிகளுக்கு மானிய விலையில் இயந்திரங்களை இன்று (31.10.2016) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தோட்டக்கலை துறையின் மூலம், தேசிய தோட்டக்கலை இயக்க 2016-2017-ம் ஆண்டு திட்டம் தோட்டக்கலை இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ், நாகர்கோவிலை சார்ந்த திரு. செல்வராஜ், தோவாளையை சார்ந்த திரு. சாமுவேல் கிறிஸ்டின், சங்கரன்புதூரரை சார்ந்த திரு. வி. ஜேம்ஸ் ஆகியோர்களுக்கு ரூ. 60 ஆயிரம் மானியத்தில் ரூ. 1,64,175/- மதிப்பிலான பவர் டில்லர்களும், தோவாளையை சார்ந்த திருமதி. பாலா ஜாண்சில் என்பவருக்கு ரூ. 75 ஆயிரம் மானியத்தில் ரூ. 3,28,400/- மதிப்பிலான மினி டிராக்டரையும் தோட்டக்கலை விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (31.10.2016) வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு.எம். நிஜாமுதீன், தோட்டக்கலை துணை இயக்குநர் திரு. எம்.அசோக் மேக்ரின், தோட்டக்கலை உதவி இயக்குநர் திருமதி. யோ. ஷீலா ஜாண் மற்றும் தோட்டக்கலை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.